[1975 ஏப்ரல் 1

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) ரூ. 1.70 இலட்சம்.

(உ) இவ்வேலே 1975-76-ம் ஆண்டு எடுத்துக் கொள்வது பற்றி பரிசீலனேயில் உள்ளது.

திரு. செ. சதாசிவம் : தலேவரவர்களே, நீண்டகாலமாக அந்த எரிக்கு நீர் வரத்து சரிவர இல்லாமல், அந்த ஏரியின்கீழ் இருக்கும் நிலமெல்லாம் வருஷா வருஷம் சாவியாகப்போகிறது. ஆகவே, அதை உடனடியாக நடைமுறைப்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலேவரவர்களே, 1975-76-ம் ஆண்டுத் திட்டத்தில் எடுத்துக்கொள்வதாக இருக்கிருேம்.

பார்த்திபனூர் கண்மாய்

*512 வினு—**திரு. தொ. க. சிறைமீட்டான்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஊராட்சி ஒன்றியம், பார்த்திபனூர் கண்மாயினே மராமத்து செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனேயில் உள்ளதா?

(இ) ஆம் எனில், மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இத்திட்டத்திற்கான முன்னிலே மதிப்பீடு ஸ்தலப் பொறியாளர்களால் தயார் செய்யப் பட்டு வருகின்றது.

(இ) இந்தக் கேள்வி எழவில்லே.

திரு. தொ. க. சிறைமீட்டான்: தலேவரவர்களே, இது ஒரு பெரிய கண்மாய் ஆகும். 2,000 ஏக்கருக்கு மேற்பட்ட கண்மாய் ஆகும். அதற்கு மதிப்பீடு தொகை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன். கால்வாயும் சேர்ந்து மதிப்பீடு செய்யப் பட்டு உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மதிப்பீடு அரசாங்கத்திற்கு வரவில்லே. இருந்தாலும் பார்த்திபனூரையும் சேர்த்து பழுது பார்க்க ரூ. 90,000 என்று உத்தேச மதிப்பீடு கொடுத்து இருக்கிருர்கள். இன்னும் அது அரசின் பரிசீலனேயில் இருக்கிறது.

திரு. தொ. க. சிறைமீட்டான்: ரூ. 90,000 என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முழுமையாக மராமத்து செய்வதற்காக மதிப்பீடு இவ்வளவு செய்யப்பட்டுள்ளதா? ஸ்பெஷல் வறட்சி நிவாரணப்பணியாக இதைச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அது ஒரு உத்தேச மதிப்பீடுதான். வறட்சி நிவாரணப்பணியாக ஏற்றுக்கொள்ள முடியுமா என்று பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அப்படி முடியுமானால் எடுத்துக் கொள்ளலாம்.

Family cards in Kanyakumari district

* 513 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state whether there is any proposal under the consideration of the Government to issue family cards to those who have wet paddy lands up to an extent of 50 cents in the belt area of Kanyakumari district?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், 25 சென்டுக்குக் குறைவான நிலமுள்ளவர்களுக்கு தற்போது அரிசி வழங்கப்படுகிறது. 25 சென்டிலிருந்து 50 சென்டு வரை நிலமுள்ளவர்களுக்கு கோதுமை வழங்கப்படுகிறது.

திரு. என். டென்னிஸ்: இப்போது 25 சென்ட் நிலம் வைத்துள்ளவர்களுக்குத்தான் குடும்பக் கார்டு வழங்கப்பட்டு அரிசி வழங்கப்படுகிறது. அதிலே பல விதமான கஷ்டம் ஏற்படுகிறது. அந்த நிலங்களில் எல்லாம் பயிர் கருகி விட்டது. அதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு போதுமான அளவுக்கு அரிசி கிடைக்கவில்லை. அதோடு பல அங்கத்தினர்கள் உள்ள குடும்பங்களில் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மேலும், 50 சென்ட் நஞ்சை நிலம் வைத்துள்ளவர்களுக்கும் குடும்பக் கார்டு கொடுத்து, அரிசி வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அறுவடை காலம் சென்று, பற்றுக்குறை மாதங்களில், அப்படிப்பட்ட யோசனைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிறைவேற்ற விரும்புகிறார்கள்.